DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

சி.சி.672/2019

Deposition of Witness PW.9

Name ஷேசாக்கிரி Caste

Father's Name Calling

Village Religion

Taluk Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2021

மு.வி.

நான் சென்னை ,மேடவாக்கம் ,பெல் நகர் முதல் தெருவில் வசித்த வருகிறேன். நான் பெடரல் வங்கியில் முதுநிலை மேலாளராக பணியாற்றி 2018 ல் பணி ஓய்வுபெற்றேன். நான் 1996 முதல் 2001 வரைஈரோடு பெடரல் வங்கி ,ஈரோடு கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்தேன். அந்த சமயத்தில் சண்முகசுநதரம் என்பவரைபாலசுப்பிரமணியம் அறிமுகப்படுத்தியதின் மூலம் நடப்பு கணக்கு எண்.6427 கீழ் சுந்தரம் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில்துவங்கப்பட்டது.அந்த கணக்கு துவங்கப்பட்ட தேதி18.2.1998 ஆகும். மேற்படி சுந்தரம் என்டர்பிரைசஸ்க்காக அதன் உரிமையாளர் சண்முகசுந்தரம் என்பவரால் தொடரப்பட்ட கணக்கில் 1-வது எதிரி விண்ணப்பதாரர் என்ற இடத்தில் கையொப்பமும், பாலசுிப்பிரமணியம் அறிமுகப்படுத்தியவர் என்ற இடத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளனர். . நூல்வியாபாரம் செய்யும் பொருட்டு துவ்ங்கப்பட்ட கணக்கில் சண்முகசுந்தரம் என்பவரால் சுந்தரம் எண்டர்பிரைசஸ்க்காக துவங்கப்பட்ட கணக்கில் இருந்த 16.4.1998 ஆம் ஆண்டில் இருந்து ரூ.6 லட்சத்திற்கு லோன் வேண்டி விண்ணப்பம் அளித்தார். அந்த விண்ணப்பமானது அப்ளிகேசன் பார் நான் பிரியாரட்டி என்ற பெயரில் தாக்கல் செய்தது ஆகும். 16.4.1998 ஆம் தேதியிட்ட விண்ணபத்துடன் குளித்தலை வட்டம், வடசேரி கிராமம் சர்வே எண்.390,391 சம்மந்தப்பட்ட அசையா சொத்தின் அசல் ஆவணங்களை முன்னிலைப்படுத்தி அடமானப் பத்திரம் ஒன்றை சண்முகசுந்தரம் எழுதிக் கொடுத்தார். அந்த விண்ணப்பத்தை பாலசுப்பிரமணியம் கையினால் பூர்த்தி செய்து கொடுக்க சுந்தரம் எண்டர்பிரைசஸ்-க்காக 1-வது எதிரி சண்முகசுந்தரம் கையொப்பம் இட்டுக் கொடுத்தார்.

மேற்படி விண்ணப்பத்தை பரிசீலித்த பின்னர் எங்கள் வங்கியின் மேலாளரான ஞானதுரை பால்ராஜ் சொத்தினை மதிப்பீடு செய்து Sanction order வழங்கினார், அந்த Sanction order cum reporting statement for advances granted by Branch manager படிவத்தில் மேலாளர் கையொப்பம் இட அதில் இன்னொரு அதிகாரியும் கையொப்பம் இட வேண்டும் என்பதால் நானும் கையொப்பம் இட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக DCB காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் நடந்த விபரம் சொன்னேன்.

3 மற்றும் 4 ஆம் எதிரி தரப்பில் கு.வி.

நான் லோன் சேங்சன் படிவத்தில் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் அப்போது இருந்த மேலாளர் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். ஆவணங்களை பரிசீலித்த பின்னிட்டு தான் கவுன்ட்டர் சைன் இடப்படும் என்றால் சரிதான். மேற்படி எதிரிகளால் கொடுக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் சந்தேகப்படும்படியான அம்சங்கள் இல்லாததால் தான் லோன் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் மேலாளருக்கும் சந்தேகம் இல்லாததால் தான் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் பேனல் அட்வகேட்டுக்கு போய்விட்டு அவர் கருத்துரை பெறப்படடபிறகு தான் லோன் சேன்சன் செய்யப்பட்டது என்றால் சரிதான. மேற்படி ஆவணங்களில் சந்தேகம் இருந்திருக்கும் நிலையில் பேனல் அட்வகேட் அது குறித்து தகவல் தெரிவித்து இருப்பார் என்றால்சரிதான். நான் போலீசார் கேட்டுக் கொண்டதின் பேரில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி- இல்லை.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

சி.சி.672/2019

Deposition of Witness PW.10

Name சந்திரன் Caste

Father's Name Calling

Village Religion

Taluk Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2021

மு.வி.

நான் தற்சமயம் கேரள மாநிலம் கொச்சின் , ஸ்ரீலட்சுமி சாந்திநகர், க.எண்.26/88-ஏ என்ற முகவரியில் வசிதது வருகிறேன். 2010 -ல் பெடரல் வங்கி,முதுநிலை மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். 2002 முதல் 2005 வரை பெடரவல் வங்கி லிமிட், ஈரோடு கிளையில் சீனியர் மேனேஜராக பணிபுரிந்தேன். நான் வங்கியின் முதுநிலை மேலாளராக பணிபுரிந்த சமயத்தில் எனக்கு முன் பணிபுரிந்த மேலாளரால் கொடுக்கப்பட்ட புகாரின் உண்மை தன்மை குறித்து DCB போலீசார் என்னை விசாரித்தார்கள். நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் அதற்கு பின்னிட்டு என்ன நடந்தது என்று என்னால் ஞாபகப்படுத்தி கூற இயலவில்லை.

மேற்படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அ.த. அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்படடது.

11.11.2002 ஆம் தேதி மதியம் சுமார் 12 மணிஅளவில் வங்கியில் இருந்த போது நிர்வாக மேலாளரான சம்பத்குமார் என்பவரும் இருந்ததாகவும் அப்போது சுமார் 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் தனது பெயர் சரவணன், த/பெ ராமன் , 14,வரதாச்சாரியார் தெரு, ரெங்காநகர், ஸ்ரீரங்கம், திருச்சி என்று அறிமுகப்படுத்திக் கொண்டதாகவும் சுமார் 4 வருடங்கள் முன்பு தனது பெயரை சுப்பிரமணியன் என்று கூறி சிலர் கடன் வாங்கியதாகவும், அதில் திருப்பூரைசேர்ந்த சண்முகசுந்தரமும் ஒருவர் என்று சொன்னதாகவும், தன் மீது எந்த தவறும் இல்லை என்றும், வழக்கு ஏதும் தன் பெயரில் கொடுக்கப்பட்டதா என்று கேட்டதாகவும், பாலசுப்பிரமணியன், சுப்பிரமணியன் ஆகியோர்கள் மீது DCB காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லி சரவணனை

வெளியே உட்கார சொல்லி போலீசுக்கு தகவல் அனுப்பிய நிலையில் சரவணன் டீக்குடித்து வருவதாக சொல்லி போனவர் திரும்பி வரவில்லை என்றும், மாவட்ட கு.பி. காவல் ஆய்வாளருக்கு தகவல் சொன்ன சமயத்தில் வெளி அலுவலில் இருந்ததால் கொடுக்க இயலவில்லை என்றும், பின்னிட்டு சரவணனின் விலாசம் குறித்து ஈரோடு மாவட்ட குற்ற பிரிவு காவல் ஆய்வாளருக்கு தகவல்கொடுத்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஞாபகம் இல்லை என்ற அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

3 மற்றும் 4 ஆம் எதிரி தரப்பில் கு.வி.

நான் மேலாளராக 3 வருடம் பணிபுரிந்தேன். மேற்படி கால கட்டத்தில் நான் நிறைய லோன் கொடுத்து உள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் விண்ணப்ப படிவத்தை சாதாரண கண்களால் பார்க்கும் போது சநதேகம் எதுவும் தோன்றவில்லை என்றால் அது தமிழ்மொழியில் இருப்பதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எங்களது வங்கியில் தமிழில் கொடுக்கப்படும் ஆவணங்களை ஆங்கிலத்திலோ, இந்தியில் மொழிபெயர்ப்பு செய்து தான் தலைமை அலுவலகம் அனுப்பப்படும். அந்த வகையில் பொதுவாக தமிழில் விண்ணப்பிக்கும் ஆவணங்களையோ, படிவங்களையோ தமிழில்மொழிபெயர்ப்பு செய்து தான் எனக்கு கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஒரு ஆவணத்தில் சந்தேகப்படும்படியாக இருந்தால் அதுகுறித்து எனக்கு மொழிபெயர்த்து கொடுக்கும் பேனல் அட்வகேட் எனக்கு கொடுப்பார் என்றால் சரிதான்.இந்த வழக்கு பொறுத்த விண்ணப்பத்தை பொறுத்தவரை அந்த சமயத்தில் நான் ஈரோடு பெடரல் கிளையில் பணியில் இல்லை. அதனால்அந்த விண்ணப்ப படிவம் குறித்து என்னால் கருத்து கூற இயலாது.

ம.வி.- இல்லை

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

சி.சி.672/2019

Deposition of Witness PW.11

Name பத்மினி Caste

Father's Name Calling

Village Religion

Taluk Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2021

மு.வி.

நான் திருச்சி ஸ்ரீரங்கத்தில் வசித்து வருகிறேன். நான் சுற்றுலா ஆர்கனைசராக உள்ளேன். நான் 1996 ஆம் வருடத்தில் Stamp Vender லைசென்ஸ் பெற்றேன். நான் ஸ்ரீர்ங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர வியாபாரம் செய்து வந்தேன். நான் 1996 ஆம் வருடத்தில் இருந்து 2000 வருடம் வரை பத்திர வியாபாரம் செய்து வந்தேன் . அதன் பின்னர் எனக்கு திருச்சி ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியில் விரிவுரையாளராக பணி கிடைத்து விட்டதால் நான் பத்திர வியாபார தொழில் செய்து வரவில்லை. 2002 ஆம் வருடம் ஈரோடு DCB காவல் நிலையத்தில் இருந்து உ.ஆ. அவர்கள் என்னை அனுகி 1997 ஆம் வருடம் என்னிடம் இருந்த பதிவேட்டில் உள்ள நபர்களின் பெயர்களை சுட்டிக்காட்டி யார் என்றுதெரியுமா என்று என்னை கேட்க எனக்கு 20 வருடம் கடந்து விட்டதால் சரிவர ஞாபகம் இல்லை என்று கூறினேன். அந்த பதிவேட்டை வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு வேண்டும என்று கேட்டுக் கொண்டதால் நான் ஈரோடு DC B காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். இது சம்மந்தமாக என்னை ஈரோடு DCB காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

3 மற்றும் 4 ஆம் எதிரி தரப்பில் கு.வி.

எனக்கு DCB ஆய்வாளர் உதவி ஆய்வாளர் ஆகியோர்க்கு வித்தியாசம் தெரியும என்றால் சரிதான். அன்றை தினம் உதவி ஆய்வாளர் வந்து என்னை விசாரித்தார். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிதான்.

ம.வி.- இல்லை.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II,ERODE.

சி.சி.672/2019

Deposition of Witness PW.12

Name பி.அய்யாவு Caste

Father's Name Calling

Village Religion

Taluk Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2021

மு.வி.

நான் திருச்சி ஸ்ரீரங்கம் தாலூக்காவில் , பெருகமணி என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தாசில்தாராக பணி புரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். 4,6,2003 ஆம் தேதி ஈரோடு DCB காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள். முத்தாள் என்பவருடைய வாரிசு சான்று , முத்தாள் என்பவரின் இறப்பு சான்று, குருவம்மாள் என்பவருடைய வாரிசு சான்று , குருவம்மாள் என்பவரின் இறப்பு சான்று, ஆகிய நான்கு ஆவணங்களையும் என்னிடம் காட்டி என்னை விசாரணை செய்தார். மேற்படி நான்கு சான்றிதழ்களிலும் 2.9.1997 ஆம் தேதியில் வட்டாட்சியர், குளித்தலை என்ற முத்திரைக்கு மேலாக P.அய்யாவு என்ற தமிழ் கையொப்பங்களை என்னிடம் காண்பித்து மேற்படி கையொப்பங்கள் என்டையதா என்று விசாரித்தார். 2.9.1997 ஆம் தேதியில் நான் குளித்தலை வட்டாட்சியர் அலுவலகத்தில்துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்ததாக நான் விசாரணையில் கூறினேன். அரசு தரப்பு ஆவணங்கள் 4 முதல் 7 வரை உள்ளவற்றை என்னிடம் காட்டி ஈரோடு DCB காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதன்பின்னர் என்னுடைய மாதிரி கையொப்பங்களை என்னிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் பெற்றுக் கொண்டார். என்னிடம் காட்டப்படும் மாதிரி கையொப்பங்களானது விசாரணையின் போத காவல் ஆய்வாளரிடம் கொடுத்தது ஆகும். மாதிரி கையொப்ப மகஜர் அ.த.சா-ஆ. 16 ஆகும். அரசு தரப்பு ஆவணங்கள் 4 முதல் 7 வரை உள்ள கையொப்பங்கள் என்னுடையது அல்ல என்று நான் காவல் ஆய்வாளர் அவர்களிடம் விசாரணையின் போது கூறினேன். மேற்படி நான்கு ஆவணங்களில் இருந்த கையொப்பங்கள் எனக்கு பழக்கமான நபர்களால்

போடப்பட்டு இருக்கலாம் என்று தெரிய வந்தது. 1996 முதல் 1998 வரை திருச்சி தாலூக்கா ,ஸ்ரீரங்கம் பிர்க்காவில் ( உள் வட்டம் ) வருவாய் ஆய்வாளராக பணி புரிந்த போது மேலூர் கிராம கர்ணமாக சிவபிரகாசம் என்பவர் என்னிடம் பணியாற்றி வந்தார். மேற்படி சிவபிரகாசம் என்னிடம் கர்ணமாக 2 வருடமாக பணிபுரிந்த நிலையில் என்னுடைய கையொப்பமானது பரிச்சயம் என்பதால்அவரால் அ.த.சா.ஆ.4 முதல் 7 ஆவணங்களில் கண்ட கையொப்பங்கள் அவரால் இடப்பட்டிருக்க கூடும் என்று ஆய்வாளரிடம் தெரிவித்து அடையாளம் காட்டினேன். ஆவண எண்.2191/97 என்ற ஆவணத்தில் இருந்த மு.கண்ணுசாமி , மு.சுப்பிரமணியன் என்ற கையொப்பமானது யாருடையது என்று என்னிடம் விசாரணையின் போது காவல் ஆய்வாளர் கேட்டார். மேற்படி ஆவணமான ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ) (மேற்படி கையொப்பங்கள் கர்ணம் சிவபிரகாசத்தின் உடையது என்று ஆய்வாளரிடம் தெரிவித்தேன். அதன்பிறகு ஆய்வாளர் என்னை விசாரித்தபிறகு குளித்தலைதாலூககா அலுவலகம் அழைத்து சென்றார். அங்கிருந்த ஆவணங்களை பார்வையிட்டு அந்த கையொப்பம் சிவப்பிரகாசத்தின் உடையது என்று அடையாளம் காட்டி கூறினேன். பின்னிட்டு சிவபிரகாசத்தையும் அடையாளம் காட்டினேன். என்னை DCB ,ஈரோடு காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்.

3 மற்றும் 4 ஆம் எதிரி தரப்பில் கு.வி.

நான் வருவர் ஆய்வாளராக பணிபுரிந்த நிலையில் அங்கிருந்த 11 கிராமங்கள் எனது ஸ்ரீரங்கம் பிர்காவின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மணியகாரரும், கர்ணமும் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பணியானது பகுதி நேர பணி என்றால் சரிதான். மேற்படி கிராமத்தை பொருததவரை நிரந்தரமாக இருவரும் கிராம அலுவல்களை மேற்கொள்வார்கள் என்றால் சரிதான். அது நிரந்தர பணி என்றால் சரிதான். சொத்து மதிப்பை பொறுத்து தான் மேற்சொன்ன இரு பணிகளும் வழங்கப்படும் என்றால் சரியல்ல. மணியகாரர்பதவிக்கு மட்டுமே அந்த விதிபொருந்தும். கர்ணத்திற்கு சொத்து மதிப்பு குறிப்பிட வேண்டியது இல்லை. மேற்படி இருவரும் ஒரே படிநிலையில் உள்ளவர்கள் எ ன்றால் சரிதான். அந்தவகையில் இருவரும் இணைந்தே தான் பணிசெய்ய வேண்டும். மேற்படி இருவரும் வருவாய் ஆய்வாளருக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல என்றால் சரிதான். சில வருவாய் உட் கோட்டத்தை பொறுத்து மணியகாரரும் கர்ணமும் வருவாய் ஆய்வாளருடன் ஒத்து போகாமல் இருப்பதுண்டு என்றால் சரியல்ல.சாட்சி பின்னிட்டு பெரும்பாலும் அவ்வாறு இருப்பதில்லை என்று கூறுகிறார். அவ்வாறுஒத்துப்போகாத நிலையில் தாசில்தாரரருக்கு ரிப்போர்ட் கொடுப்பதில்லை மேற்படி என்னிடம் பணிபுரிந்த 11 கர்ணத்தின் கையொப்பமும் எனக்கு ஓரளவுக்கு

தெரியும். அவ்வாறு தெரிந்து இருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. நான் எழுதும் போது நேரடியாகபார்த்து இருக்கிறேன். மேற்படி சிவபிரகாசத்துடன் பணிபுரிந்த போது ஏற்பட்ட மனஸ்தாபத்தால் அவருக்கு எதிராக சாட்சி அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் பணியில்இருந்த சமயத்தில் தமிழ், ஆங்கிலத்தில் கையொப்பம்இடும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். ஒரே படி மற்றும் பதவி நிலையில் இருப்பவர்கள் விடுப்பில் இருந்தால் அதே படிமற்றும் பதவிநிலையில் இருப்பவர்கள் தான் கையழுத்து இட முடியும். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் விடுப்பில் இருக்கும் போது இன்சார்ஜ்க்குரியவற்றை பற்றி தாசில்தார் தான் முடிவு செய்வார். முதல்விசாரணையில் குறிப்பிட்ட இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டதாக சொல்லப்படும தேதியில் நான் தலைமையிடத்து துணைவட்டாட்சியர் Cadre ல் இருந்தேன் என்றால் சரிதான். தலைமையிடத்துதுணை வட்டாட்சியர் விடுப்பில் இருக்கும் போது அதே தகுதியில் உள்ள என்னையும் இன்சார்ஜ் ஆக போடுவதுண்டு. சான்றிதழ் வழங்கப்பட்டதாகசொல்லப்படும் தேதிக்கும், நான் அவை போலியானது என்று அடையாளம் காட்டியதற்கும் இடையே 6,7 வருடம் இருந்திருக்கும் என்றால் சரிதான். பொதுவாக ஒருகையொப்பம் நாளுக்கு நாள் மாறுபடும் என்றால்சரியல்ல. அ.தா.சா.ஆ.2 முதல் 7 ஆவணங்களில் உள்ள கையொப்பம் நானே இட்டேன் என்றாலும், வழக்கிற்காக வேண்டி நான் கையொப்பம் இடவில்லை என்று பொய்சாட்சிஅளிப்பதாக சொன்னால் சரியல்ல. விசாரணை அதிகாரி முன்பே நான் சொன்ன சாட்சிகள் விபரம் அடங்கிய வாக்குமூல ஜெராக்ஸ் காப்பியை கொடுத்திருந்தார் . அதை படித்து விட்டு தான்சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான்.நான் சாட்சியத்தை எனது நினைவில் இருந்து கூறவில்லை என்றாலும், போலீசார் எனக்குகொடுத்த வாக்குமூலத்தை படிதது பார்த்து சாட்சிஅளித்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகசாட்சிஅளிப்பதாக சொன்னால் சரியல்ல.

ம.வி- இல்லை.